**வகுப்பு : 8-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

## இயல் - 4

**I. சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. அழகு : ____________________
2. கற்றவர் : ____________________
3. அணிகலன் : ____________________

**விடை:**

1. **அழகு** : கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே **அழகு.**
2. **கற்றவர்** : **கற்றவர்க்குச்** சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. **அணிகலன்** : அழகு சேர்க்கும் பிற **அணிகலன்கள்** கற்றவர்க்குத் தேவையில்லை.

**II. குறுவினா:**

**1. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?**

கற்றுணர்ந்தவர்களுக்கு அழகு செய்யக் கல்வி அறிவென்னும் ஆபரணமேயன்றி வேறு அணிகலன்கள் தேவையில்லை.

**2. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?**

மன்னிக்கத் தெரிந்த மனிதரின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றதாகும்.

**3. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?**

நம்மை அழித்திட வந்த பகைவர் என்றாலும் அவர்களிடம் நாம் அன்பு காட்ட வேண்டும்.

**4. இன்றைய கல்வியின் நிலைப் பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?**

- இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது.
- ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது.
- இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது.
- குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச்செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாய்க் கொள்ளப்பட்டு வருகிறது.

**5. தாய்நாடு என்றும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?**

- தமிழ் மக்களாகிய நாம் நமது தாய்மொழி வாயிலாய்க் கல்வி பெறலே சிறப்பாகும்.
- அதுவே இயற்கை முறையாகும்.
- தாய்மொழியைக் கொண்டே தாய்நாடு என்றும் பெயர் பிறக்கிறது.

**III. சிறுவினா.**

**1. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

அழகினுக்கு மேலும் எவர்தாம் அழகினைத் செய்வார்? முழுவதும் முழுமையான மணிகள் பதிக்கப்பெற்ற ஆபரணத்துக்கு மேலும் அழகைக் கொடுக்கும் வேறு ஆபரணங்கள் தேவை இல்லை. அது போல, கற்றுணர்ந்தவர்களுக்குக் கல்வி அறிவென்னும் ஆபரணமேயன்றி வேறு ஓர் அழகிய ஆபரணம் தேவை இல்லை.

2. **புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாய்க் கவிஞர் கூறுவன யாவை?**

- கண்ணியம் தவறாமல் நமது திறமையை நாம் காட்ட வேண்டும்.
- சினம் நம் கண்ணை மறைத்திடும்போது நாம் அறிவுக்கு வேலை கொடுத்திட வேண்டும்.
- தவறு செய்தவர்களை நாம் மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- நாம் வாழும் சில காலத்தில் செருக்கின்றி வாழ வேண்டும்.

3. **தமிழ் வழிக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.**

- தாம் கண்ட புதுமைகளை அவரவர் முதன்முதல் தம் தாய்மொழியில் வரைந்து விடுகின்றனர்.
- பின்னர், அவை பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன.
- நம்மை அழித்திட வந்த பகைவன் என்றாலும் நாம் அன்புக்குப் பாதை விட வேண்டும்.
- அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர்களும் பின்பற்றித் தாய்மொழியை வளர்த்தல் வேண்டும்.
- குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது.
- தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்றும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தமிழ்வழிக் கல்விக்கு ஆக்கந்தேடுவோம்.

**4. அறிவியில் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?**

- உலக வாழ்விற்கு மிகமிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக் கலையாகும்.
- உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும்.
- புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றதாகும்.
- நம் முன்னோர் கண்ட பல உண்மைகள், அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிதாகும்.
- இக்கால உலகத்தோடு உறவுக்கொள்வதற்கும் அறிவியல் தேவையாகிறது. ஆதலால் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞர் உலகில் பரவிட வேண்டும்.

**5. எழுவாய் வேற்றுமையை விளக்கு.**

**எ.கா. பாவை வந்தாள்.**

இவ்வாறு, ஒரு பெயர்ச்சொல் இயல்பாய் வந்து, எழுவாயாக நின்று, பயனிலைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமையாகும். அஃது எழுவாய் வேற்றுமை எனப்படும்.

**6. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?**

ஒரு பொருளின் தொழிலோடு மற்றொன்றன் தொழில் சேர்ந்து நிகழ்வது உடனிகழ்ச்சி ஆகும்.

**எ.கா.** தாயோடு குழந்தை சென்றது.

அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

7. **கீழ்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து, ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

1. மா + மரம் = மாமரம்
2. மா + இலை = மாவிலை
3. மா + கனி = மாங்கனி
4. மா + காய் = மாங்காய்
5. தேன் + கூடு = தேன்கூடு
6. குருவி + கூடு = குருவிக்கூடு
7. செம்மை + மரம் = செம்மரம்
8. சிட்டு + குருவி = சிட்டுக்குருவி
9. குருவி + முட்டை = குருவிமுட்டை
10. செம்மை + மலர் = செம்மலர்

Next Generation School

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

## நூலகம்

**(முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை)**

**முன்னுரை:**

'**ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது**' என்னும் பொன்மொழி நூலகத்தைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை நமக்கு எடுத்துரைக்கின்றது. '**நூல் பல கல்**' என்னும் ஔவையின் அமுத மொழியும் இதற்குச் சான்றாய் விளங்குகிறது. உயர்ந்த வாழ்க்கை நெறியையும், அறிவுச் செல்வத்தையும் அள்ளித்தரும் நூலகம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நூலகத்தின் தேவை:**

'**ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்**' என்பது பழமொழி. அதுபோல, '**நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்**' என்னும் பழமொழியும் உண்டு. தனியார் நூலகத்தில் உள்ள நூல்களைப் பொதுமக்கள் பயன்படுத்த முடியாததால் அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொதுநூலகங்கள் அமைக்கப்பட்டன.

**வகைகள்:**

நூலகத்தைப் பள்ளி நூலகம், பொது நூலகம் எனப் பிரித்துக் கூறலாம். இவை தவிரக் கல்லூரி நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்கள், சிறப்பு நூலகங்கள், தேசிய நூலகங்கள், வீட்டு நூலகங்கள் எனப் பல்வேறு நூலகங்கள் உள்ளன.

**நூலகத்திலுள்ளவை:**

நூலகத்தில் நூல்கள் பல்வேறு தலைப்புகளில், முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியம், அறிவியல், வரலாறு, கவிதை, சிறுகதை, ஆய்வு நூல், அரசியல், ஆன்மீகம், புதினங்கள், கட்டுரைகள் எனப் பல்வேறு நூல்களும் அங்கே எளிதாக எடுத்துப்படிக்கும் வண்ணம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

**படிக்கும் முறை:**

அமைதியின் உறைவிடமாய்த் திகழ்வது நூலகமாகும். நாம் உள்ளே சென்றதிலிருந்து வெளியே வரும்வரை அமைதி காத்தல் இன்றியமையாததாகும். நூல்களை எடுக்கும் போதும் படித்துவிட்டு வைக்கும் போதும், வரிசை மாறாமல் வைக்க வேண்டும். நூல்களைப் படித்துவிட்டுக் கிழிந்துவிடாமலும், கசங்கிவிடாமலும் பக்குவமாய்க் கையாள வேண்டும்.

**முடிவுரை:**

எத்துறை சார்ந்த நூல்களையும் செலவின்றிப் படித்துப் பயன்பெற உதவும் அறிவுக்கருவூலமாய் நூலகம் விளங்குகிறது. வாழ்வில் வெற்றி பெற நூலகத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். அறிவு வளரவும், ஆற்றல் மிளிரவும் நூல்களைப் பேணிக்காக்கும் நூலகங்களைப் போற்றிப் பாதுகாப்போம்.

Next Generation School